# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035.
(Pension Pay Office Back Side) (சைதாப்பேட்டை மெட்ரோ ரயில் நிலையம் அருகில்), தொலைபேசி:044-2951 5590

**ஆணை நாள் – 02.04.2025**

**முன்னிலை**

**முனைவர் மா. செல்வராஜ், எம்.எஸ்.சி., பி.எச்.டி.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்.SA.16645/F/2024

திரு A.M. ஷாஜஹான் .. மனுதாரர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம், எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001. .. பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| தகவல் பெறும் உரிமைச் சட்டம், பிரிவு 6(1)-ன்கீழ் மனுதாரர் மனு செய்த நாள் | 25.03.2024 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 06.05.2024 & 04.07.2024 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 08.06.2024 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 16.08.2024 |

*******

## ஆணை

இவ்வழக்கு இன்று (02.04.2025) இவ்வாணையத்தில் காணொளி காட்சி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு A.M. ஷாஜஹான் என்பவர் காணொளி காட்சி வாயிலாக ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு. ஜனாப் S. சையத் ஜாபீர், கண்காணிப்பாளர், தமிழ்நாடு வக்ஃப் வாரியம், சென்னை என்பவர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ், சென்னை, தமிழ்நாடு வக்ஃப் வாரிய அலுவலக பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், திருவண்ணாமலை நவாப் சந்தாமின் மஸ்ஜித் மீர் மோமின் மதத் டோம்ப் வக்ஃப்பின் 2015-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை உள்ள வரவு செலவு கணக்கு பட்டியலின் விவரம் மற்றும் அவற்றின் நகல்கள், மேற்கண்ட ஆண்டிற்கான தணிக்கைத்துறை அறிக்கையின் நகல், மேற்கண்ட வக்ஃப்பின் முழுமையான வாடகைதாரரர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் முழு விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 3 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுவிற்கு தகவல்கள் வழங்கப்படவில்லை எனபதால், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1)-ன்கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். அம்மனுவிற்கும் தகவல்கள் வழங்கப்படவில்லை என்பதால், மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன்கீழ் தனது இரண்டாவது மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளார். அதனடிப்படையில், மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (02.04.2025) விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு மனு எண்.4190/2025/ஆ7/தி.மலை நாள் 27.03.2025 தேதியிட்டு பதிவுத்தபாலின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை இவ்வாணையத்தின் பார்வைக்கும் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான மனுதாரர், தனது மனுவில் திருவண்ணாமலை நவாப் சந்தாமின் மஸ்ஜித் மீர் மோமின் மதத் டோம்ப் வக்ஃப்பின் 2015-ஆம் ஆண்டு முதல் 2024-ஆம் ஆண்டு வரை உள்ள வரவு செலவு கணக்கு பட்டியலின் விவரம் மற்றும் அவற்றின் நகல்கள், மேற்கண்ட ஆண்டிற்கான தணிக்கைத்துறை அறிக்கையின் நகல், மேற்கண்ட வக்ஃப்பின் முழுமையான வாடகைதாரரர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் முழு விவரம் உள்ளிட்ட விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியதாகவும், இது குறித்து முழுமையான தகவல்கள் தனக்கு வழங்கப்படவில்லை என்றும், தனது மனுவில் கோரியுள்ள தகவல்களை தனக்கு முழுமையாக பெற்று வழங்குமாறும் ஆணையத்தை கோரினார்.

6. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத்தகவல் அலுவலரின் பதிலையும் ஆணையம் கவனமுடன் பரிசீலனை செய்கையில், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் முழுமையான தகவல்களாக இல்லை என இவ்வாணையம் கருதுகிறது. எனவே, பொதுத் தகவல் அலுவலருக்கு இவ்வாணையம் இறுதி வாய்ப்பு வழங்கி, கீழ்க்கண்ட உத்தரவு இவ்வாணையத்தால் பிறப்பிக்கப்படுகிறது:-

- மேற்படி, மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவில் கோரிய தகவல்களை மனுதாரருக்கு முழுமையாக '**தகவல் பெறும் உரிமைச் சட்டப்படி தகவல்கள் வழங்கப்படுகிறது**' என்ற முத்திரையுடன் ஒவ்வொரு பக்கத்திலும் சான்றொப்பமிட்டு இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஏழு நாட்களுக்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து, மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல்கள் ஆகியவற்றினை இவ்வாணையத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்பிவைக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடப்பட்டு, மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (மா. செல்வராஜ்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்.SA.16645/F/2024**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத்தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர்,
தமிழ்நாடு வக்ஃப் வாரியம்,
எண்.1, ஜாபர் சிராங் தெரு,
வள்ளல் சீதக்காதி நகர், சென்னை - 600 001.

**வழக்கு எண்.SA.16645/F/2024**

**மனுதாரர்**

திரு A.M. ஷாஜஹான்,
எண்.163, அவலூர்பேட்டை ரோடு,
ஜன்னத் நகர், திருவண்ணாமலை - 606 601.

Copy to: File
SNPS / 03.04.2025